RESEARCH ARTICLE

INDIAN JOURNAL OF TAMIL

Asian Research Association

DOI: 10.54392/ijot2626

# Economic Significance and Sustainability of Indigenous Cattle Breeds in Tamil Nadu

**M. Deepika [a,*], K. Dhanalakshmi [a]**

[a] Department of Tamil, PSGR Krishnammal College for Women, Coimbatore-04, Tamil Nadu, India.

*Corresponding author Email: deepikamkumar02@gmail.com

DOI: https://doi.org/10.54392/ijot2626

Received: 30-03-2026; Revised: 09-05-2026; Accepted: 16-05-2026; Published: 28-05-2026

**Abstract:** Indigenous cattle breeds constitute an important component of the agrarian, cultural, and economic heritage of Tamil Nadu. The state was historically associated with several indigenous cattle breeds, including Kangayam, Umbalachery, Bargur, Alambadi, Pulikulam, and Malaimadu. However, the number and population of several indigenous breeds have declined considerably over time, raising concerns not only about livestock biodiversity but also about the erosion of traditional knowledge, agricultural practices, and rural livelihoods associated with cattle rearing. The introduction and expansion of exotic and crossbred varieties, particularly Jersey and Holstein Friesian cattle during the period of dairy modernization, significantly altered traditional cattle-based agricultural systems. This study examines the economic significance of indigenous cattle in Tamil Nadu, with particular attention to livestock-based livelihoods, milk production, agricultural practices, traditional cattle-rearing systems, and the relationship between indigenous cattle and rural economic sustainability. Drawing upon field-based observations and interactions with cattle rearers and farming communities, the study examines the economic perceptions surrounding indigenous and crossbred cattle. It also considers the wider cultural significance of cattle as reflected in proverbs, rituals, oral traditions, and community practices. The field observations indicate that the economic value of indigenous cattle cannot be assessed solely through milk yield. Their contribution to agricultural sustainability, traditional livestock practices, manure-based farming systems, and household livelihoods must also be taken into account. The study identifies a significant gap between the commonly perceived economic limitations of indigenous cattle and the broader economic benefits observed in traditional farming contexts. It therefore argues that indigenous cattle should be understood not merely as livestock but as an integral component of agrarian life, cultural heritage, ecological knowledge, and rural economy. The study highlights the need for appropriate economic evaluation, conservation strategies, market support, and policy interventions to strengthen indigenous cattle-based livelihoods in Tamil Nadu. Ultimately, conserving indigenous cattle is presented as an important means of preserving traditional knowledge, sustainable agricultural practices, and the socio-economic resilience of rural communities.

**Keywords:** Indigenous Cattle, Economic Heritage of Tamil Nadu, Sustainable Agricultural Practices, Traditional knowledge, Rural Communities.

# பொருளாதாரத்தை உச்சநிலைக்குக் கொண்டுச் செல்ல வழிவகுக்கும் தமிழ்நாடு நாட்டு மாடுகள்

**மு. தீபிகா [அ,*], க. தனலட்சுமி [அ]**

[அ] தமிழாய்வுத்துறை, பிஎஸ்ஜிஆர் கிருஷ்ணம்மாள், மகளிர் கல்லூரி, கோயம்புத்தூர், தமிழ்நாடு, இந்தியா.

## முன்னுரை

தமிழ்நாட்டில் 15 நாட்டு மாட்டு இனங்கள் இருந்தன. காங்கேயம், உம்பளச்சேரி, பர்கூர், ஆலம்பாடி, புலிக்குளம், மலைமாடு என. அது இன்று எண்ணிக்கை 7 ஆக குறைந்துள்ளது. இது வெறும் எண்ணிக்கை குறைவு அல்ல, இது ஒரு பண்பாட்டின் அழிவு, ஒரு பொருளாதாரத்தின் அழிவு, ஒரு அறிவின் அழிவு. 1960-ல் வெண்மை புரட்சி வந்தது. ஜெர்சி, ஹெச்.எப் மாடுகள் வந்தன. "அதிக பால்" என்று சொல்லி நாட்டு மாடுகள் ஒதுக்கப்பட்டன. பால் உற்பத்தி 10 மடங்கு அதிகமானது, ஆனால்

விவசாயி கடன் 20 மடங்கு அதிகமானது. கிடை தொழில் அழிந்தது, சந்தைகள் சரிந்தன. இந்த அழிவை களத்தில் இருந்து பார்க்க வேண்டும் என்பதே இந்த ஆய்வுக்கட்டுரை நோக்கம்.

## நாட்டு மாடுகள்

நாட்டு மாடுகள் முதுகில் திமிலுடன் கழுத்து தசைகள் தொங்கும்படி காது தொங்கும் படி இருக்கும். இந்திய நாட்டு மாடுகளும் அதன் கலப்பின மாடுகளும் மிகுந்த வெப்பநிலையைத் தாங்க கூடியதாக உள்ளதால் இந்திய வெப்பமண்டல நாடுகளில் வளர்க்கப்படுகின்றன நாட்டு மாடுகள் மற்றும் கலப்பின மாடுகள் போன்றவை இழுவை விலங்கு, வண்டி மாடுகள் போன்ற பணிவிலங்காகவும், பால் மாடுகளாகவும், இறைச்சி தேவைக்காகவும் வழங்கப்படுகின்றன. நாட்டு மாடுகளானது இந்தியக் காட்டெருதுவில் இருந்து தோன்றியதாக கருதப்படுகிறது. தொல்லியல் சான்றுகளின் படி 2000 காலகட்டத்தில் இந்த இனமானது எகிப்தில் இருந்தது என்றும் அது கிழக்கு அல்லது தெற்கிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டதாக கருதப்படுகிறது.

தமிழகத்தில் முன்னொரு காலத்தில் 92 வகையான நாட்டு மாடுகள் இருந்ததாக காளை வளர்ப்போர் கூறுகிறார்கள். அத்தக்கருப்பன், அழுக்கு மறையன், ஆணறிகாலன், ஆளைவெறிச்சான், ஆனைச் சொறியன், கட்டைக்காளை, கருமறையான், கட்டைக்காரி என்று 92 வகை நாட்டு மாடுகள் உள்ளன. நாகரிக வளர்ச்சியாலும், ஜெர்சி இன பசுக்கள் வரவாலும் நாட்டு மாட்டின் இனங்கள் படிப்படியாக குறையத் தொடங்கியது (Nagarajan, 2017). இதனால் நாட்டு மாட்டு இனங்களின் எண்ணிக்கை வெகுவாக குறைந்து இன்று 35-க்கும் குறைவான எண்ணிக்கையில் காணப்படுகிறது.

## தமிழ்நாட்டின் முக்கிய நாட்டு மாடுகளின் வகைகள்

காங்கேயம் மாடு: கோயம்புத்தூர், ஈரோடு, திருப்பூர் மாவட்டங்களைச் சேர்ந்தவை. பலமான உடலமைப்பு மற்றும் உழைப்புக்குப் பெயர் பெற்றவை. புலிக்குளம் மாடு: சிவகங்கை, மதுரை மாவட்டங்களைச் சார்ந்தவை. ஜல்லிக்கட்டுப் போட்டிகளில் பங்கேற்பதற்கு மிகவும் பெயர் பெற்ற வீரியமிக்க இனம். உம்பளச்சேரி மாடு: தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர் மாவட்டங்களில் காணப்படுகின்றன. இவற்றுக்கு 'மொட்டை மாடு' என்ற பெயரும் உண்டு. பர்கூர் மாடு: ஈரோடு மாவட்டம் பர்கூர் மலைப்பகுதிகளில் காணப்படுகின்றன. வனப்பகுதிகளில் எளிதில் வளரும் தன்மை கொண்டவை (Sarang *et al.*, 2024).

## கொம்பு

தமிழ்நாட்டு நாட்டு மாடுகளின் அடையாளமே கொம்பு தான். காங்கேயம் மாட்டை காங்கேயம் என்று சொல்வதே அதன் பிறை கொம்பை வைத்து தான். கொம்பு இல்லாத காங்கேயம், கொம்பு இல்லாத புலிகுளம் என்பது அசல் இல்லை என்று கிடைக்காரர் சொல்வார். இந்த கொம்பை அழகுபடுத்துவதற்கும், பாதுகாப்பதற்கும், வயதை மறைப்பதற்கும் செய்யப்படும் தொழில்நுட்பத்திற்குப் பெயர் தான் கொம்பு சீவுதல். இது 500 ஆண்டு பழமையான நாட்டுப்புற கால்நடை மருத்துவம்.

### கொம்பு சீவுதல்

நார்கொம்பு, நரம்பு கொம்பு, மான் கொம்பு, பூ கொம்பு, வட்ட கொம்பு, திருகு கொம்பு, நெடுங் கொம்பு, சோத்துக் கொம்பு, கெட்டிக்கொம்பு, போத்துக் கொம்பு, கல்லுக் கொம்பு, ஊசி கொம்பு, விரி கொம்பு. ஒரு கன்று பிறந்த பின் அதன் கொம்பை சரி செய்ய 18 முதல் 20 மாதத்திற்குள் இரண்டு கொம்புகளையும் சேர்த்து கட்டி விடுவார்கள். இதனால் கொம்பானது விரியாமல் சரியான வடிவத்தில் வளரும்.

1. முழுமையாக கொம்பு எடுத்தல்,
2. அழகுக்காக சீவுதல்,
3. பாதுகாப்புக்காக மழுக்குதல் - கிடையில் 100 மாடு இருக்கும் போது, ஒரு மாடு மற்ற மாட்டை கொம்பால் குத்தி காயம் ஏற்படுத்தும். குறிப்பாக முட்டுக் கொம்பு உள்ள மாடு ஆபத்து. அதனால் கொம்பு நுனியை 1 இன்ச் வெட்டி விடுவார்கள். வெட்டிய இடத்தில் சூடு வைத்து ரத்தத்தை நிறுத்துவார்கள். இதற்கு பெயர் கொம்பு மழுக்குதல். 2 பல் வயதில் (2.5 வயது) ஒரே ஒரு முறை தான் செய்வார்கள். இது செய்த மாடு சாந்தமாக இருக்கும் என்று நம்பிக்கை. சந்தையில் இதற்கு பாதுகாப்பு காரணமாக ரூ.5,000 கூடுதல் விலை.

முதலில் மாட்டை கயிறு கொண்டு காலை கட்டி கீழே படுக்க வைப்பார்கள். இதற்கு பெயர் மாடு அமுக்குதல். 3 பேர் சேர்ந்து செய்வார்கள். பின் கண்ணைத் துணியால் கட்டி விடுவார்கள். மாடு பயப்படாமல் இருக்க. பின் இரும்பு அரம் கொண்டு கொம்பை தேய்ப்பார்கள். 30 நிமிடம் ஆகும். கொம்பு

சூடாகும். பின் கத்தி கொண்டு வடிவம் கொடுப்பார்கள். சீவிய பின் வேப்ப எண்ணெய் + மஞ்சள் + சுண்ணாம்பு + தேங்காய் எண்ணெய் கலந்து பூசுவார்கள். இது நாட்டுப்புற நுண்ணுயிர் எதிர்ப்பி. தொற்று வராது. 3 நாள் மாட்டைத் தனியாக கட்டி பச்சை தீவனம் மட்டும் கொடுப்பார்கள். கிடையில் விட மாட்டார்கள். மொத்த செலவு ரூ.200 மட்டும். நவீன மருத்துவம் ரூ.1500-ல் செய்வதை, கிடைக்காரர் ரூ.200-ல் வேப்ப எண்ணெய், மஞ்சள் கொண்டு செய்கிறார். ஆனால் இதே நுட்பம் சந்தை மோசடிக்குப் பயன்படுகிறது.

## பொருளாதாரம்

தமிழ்நாடு முழுக்க 1 வருடத்திற்கு 2 லட்சம் மாட்டுக்குக் கொம்பு சீவப்படுகிறது. 1 மாடு ரூ.200 என்றால் ரூ.4 கோடி தொழில். இதை செய்பவர்கள் "கோட்டு தச்சன்" என்று ஒரு சமூகமாகவே உள்ளனர். திருப்பூர், ஈரோடு மாவட்டத்தில் 200 குடும்பம் இந்த தொழிலை மட்டும் செய்கின்றன. 1 குடும்பம் 1 நாள் 5 மாடு சீவினால் ரூ.1000. மாதம் ரூ.25,000.

ஜல்லிக்கட்டு காளைகளுக்குக் கொம்புகள் முழுவதும் சீவப்பட்டிருக்கும். ஆறு ஏழு லேயர் இருக்கும். அதில் ஒரு லேயர் மட்டும் எடுத்து சரிசமமாக உருண்டையாக பளபளப்பாக சீவுவார்கள். மாடுகளின் கொம்புகள் பளபளப்பாக இருப்பதன் மூலம் சூரிய ஒளியானது நேரடியாக கொம்புகள் மூலம் உடலுக்குள் செல்கிறது. இதனால் கறவைக்கும் நன்றாக இருக்கும். மருத்துவர்களும் அப்படித்தான் சொல்கிறார்கள். கொம்பு சீவியப்பின் சுண்ணாம்பு, மஞ்சள் பொடி பூசுவார்கள் தேவையில்லாத கொசுக்கள் ஈக்கள் மாட்டின் உடலில் ஒட்டாது. கிருமி நாசினியாக செயல்படும் விளக்கெண்ணெயும் பூசுவார்கள். “எனது தொழில் கொம்பு சீவுதல் ஆதலால் பல ஊர்களில் இருந்து வந்து கொம்பு சீவி செல்வார்கள். சந்தை பண்ணை போன்ற இடங்களுக்கும் என்னை அழைத்தும் கொம்பு சீவச் சொல்வார்கள். இந்த கொம்பு செய்வதற்கான கருவிகளை வெளியில் இருந்து வாங்குவதில்லை. நாங்களே தயார் செய்கிறோம். கருவிகள் தயாராவதற்கு மூன்று வாரங்கள் ஆகும். நான் கொம்பு சீவுவது, லாடம் அடிப்பது என்று எல்லாம் செய்வேன். பரம்பரையாக இது செய்யவில்லை நானே தான் இத்தொழிலைக் கற்றுக் கொண்டேன்”. தமிழ்நாடு முழுவதும் 200 250 பேர் தான் இத்தொழில் செய்பவர்கள் இருக்கிறார்கள் நாட்டு மாடுகள் வளர்ப்பது குறைந்தது என்பதால் தொழிலாளர்களும் குறைந்துவிட்டனர். “என் முன்னோர் லாடம் கட்டுவது என்று ஒன்று இரண்டு பேர் சேர்ந்து இந்த வேலை செஞ்சுகிட்டு இருந்தாங்க அப்படியே மாறிமாறி இப்போது இந்தத் தொழிலுக்கு வந்தாச்சு விளக்கெண்ணெய் காட்டிலும் தேங்காய் எண்ணெய் கொம்பு சீவியப்பின் கொம்புகளில் தடவுவதற்கு சிறந்தது பூச்சிகள் எதுவும் ஒட்டாது, திண்ணீர் மஞ்சள் பூசலாம். சாயம் அடித்த மாடு வந்தால் அதை முதலில் சரிபார்க்க வேண்டும். கொம்பு சீவி சாயம் அடித்தார்களா அல்லது அப்படியே சாயம் அடித்தார்களா என்று சரி பார்க்க வேண்டும் அதை தட்டிப் பார்த்தும் அழுத்திப் பார்த்தும் தெரிந்து கொள்ளலாம். ஒரு மாடு 18 வருடம் உயிருடன் இருக்கும். அதுவரையில் அதன் கொம்பும் வளர்ந்து கொண்டே இருக்கும் மனு மனிதனுக்கு நகம் வழங்குவது போல தான். மாடுகளுக்கும் மூன்று வருடத்திற்கு ஒரு முறையாவது கொம்பு எடுத்து சீவ வேண்டும்” என்று பிரகாஷ் கூறினார்.

## மாட்டின் சுழி

நன்மை செய்யும் சுழிகள்,

1. கோபுரச்சுழி

2. லட்சுமிச் சுழி - செல்வாக்கு உடன் வாழ்வர் என்ற நம்பிக்கை ஆனால் கிடைப்பதற்கு அரியது இந்த மாடு.

3. தாமணி சுழி - இந்தச் சுழி உள்ள மாட்டை வாங்குபவர் ஏராளமான மாடு வாங்க கூடும் என்று நம்பிக்கை. முதுகுத்தண்டில் கோடும் அதற்கு இருபுறமும் சுழி இருக்கும்.

4. வரி சுழி

5. இரட்டைக்கவர் சுழி

6. ஏறுபூரான் சுழி

7. விபூதி சுழி

8. கொம்புதானா சுழி

9. ஏறு நாக சுழி

10. பாசிங்சுழி.

### மாட்டின் தீமை தரும் சுழிகள்

1. முக்கண் சுழி / அக்கினி சுழி
2. குடைமேல் குடை | இடி மேல் இடி
3. விலங்கு சுழி
4. பாடை சுழி
5. பெண்டிழந்தான் சுழி
6. நாகப்பட சுழி
7. தட்டுச் சுழி
8. துடைப்பைச் சுழி
9. புட்டாணிச் சுழி
10. படைக்கட்டு சுழி
11. எச்சுப்புள்ளி
12. வால் முடங்கிச் சுழி
13. இறங்கு நாக சுழி
14. கருநாக சுழி
15. மென்னிப்பிடி சுழி
16. இறங்கு பூரான் சுழி இதனைப் பார்த்து வாங்க வேண்டும். இதனை ஏமாற்றி நம்மிடம் விற்கவே நினைப்பார்கள்.

### சாணம்

மாடுகளில் இருந்து வரும் சாணத்தை வைத்து வருவாய் ஏற்றலாம் அதை வைத்து கன்றுகளையும் வளர்க்கலாம். வறட்டி, திருநீறு, உரம், சாம்பிராணி, பஞ்சகவ்யம் விளக்கு, அமிர்தக் கரைசல், ஜீவாமிர்தம், பற்பொடி, குளியல் பொடி, சோப்பு, கொசுவத்தி சுருள், பஞ்சகவ்ய நெய், தைலம் போன்றவற்றை மாட்டின் சாணத்தில் இருந்து தயாரிக்கலாம். இன்றைய பொருட்களில் அதிக ரசாயனப் பொருட்கள் கலந்துள்ளதால் தீமை உண்டாகிறது. அதனால் இவ்வாறு இயற்கை முறையில் தயாரித்து விற்பதன் மூலம் வருவாயும் அதிகரிக்கிறது. இயற்கை பொருட்களையும் பயன்படுத்தவும் முடிகிறது.

### சாணம் பற்றிய சடங்குகள்

வீடு மெழுகுதல், சாண பிள்ளையார், மாட்டு பொங்கல், சாவு வீட்டில் சாணம், சாணம் - பெண் - லட்சுமி நாட்டுப்புறவியலில் சாணம் பெண். பசு பெண், சாணம் பெண்ணின் உற்பத்தி. ஆண் மாட்டின் சாணத்தை விட பெண் மாட்டின் சாணம் சக்தி வாய்ந்தது என்று நம்பிக்கை. காரணம் பெண் மாடு கன்று போடும், பால் கொடுக்கும், சாணம் போடும். சாணம் அள்ளும் பெண்ணை "லட்சுமி" என்பார்கள்.

### சாணம் - ஜாதி - சமூகம்

காங்கேயம் பகுதியில், கொங்கு வெள்ளாளர் வீட்டில் அவர்களே அள்ளுவார்கள். சாணத்தை எல்லோரும் தொடுவார்கள். சாணம் சாதி பார்க்காது. சாமி மாதிரி. கோவில் விபூதி சாணத்தில் இருந்து வருவதால் எல்லா சாதியும் தொடும். சாணம் என்பது வேதியியல் அல்ல, அது பண்பாடு. எனவே நாட்டு மாடு காப்பது மாடு காப்பது அல்ல, ஒரு பண்பாட்டைக் காப்பது.

### சாணத்தின் வகைப்பாடு - கிடைக்காரர் பார்வை

கிடைக்காரர் சாணத்தை ஐந்து வகையாகப் பிரிக்கிறார். கறவை சாணம், சினை சாணம், கிடை சாணம், கன்று சாணம், காளை சாணம்.

### சாணம் வித்தியாசம்

நாட்டு சாணம்: கெட்டி, பச்சை, வாசம் இல்லை. 1 கிலோ சாணம் 1 கிலோ எரு. விபூதி வரும், பஞ்சகவ்யம் வரும். ஜெர்சி சாணம்: தண்ணி, நாற்றம். எரு ஆகாது, விபூதி ஆகாது. ஏனென்றால் தீவனம் கெமிக்கல். சாணத்தை பார்த்து மாட்டை சொல்லலாம்.

### பண்பாட்டு வித்தியாசம்

**நாட்டு மாடு**: கோவிலில் பூஜை, வீட்டில் தாய், சடங்கில் முதல் பால். காங்கேயம் காளை ஜல்லிக்கட்டுக்குப் பயன்படுத்தப்படுகிறது.

**ஜெர்சி:** பூஜை இல்லை, கோவிலுக்குப் போகாது. ஜல்லிக்கட்டில் ஜெர்சி இல்லை. ஏனென்றால் ஜெர்சிக்குத் திமில் இல்லை, வீரம் இல்லை. எப்படி கண்டுபிடிப்பது,

1. நாட்டு மாடு - மஞ்சள் நிறம், ஜெர்சி - வெள்ளை நிறம். 2. நாட்டு மாடு - மஞ்சள் நெய். 3. நாட்டு மாடு - கெட்டித் தயிர், ஜெர்சி - தண்ணீர் தயிர். 4. திமில்: திமில் இருந்தால் நாட்டு மாடு, இல்லாவிட்டால் ஜெர்சி. திமில் தான் A2-யின் அடையாளம். 5. கன்று: கன்று மஞ்சள் என்றால் நாட்டு மாடு.

## விவசாயத்தில் நாட்டு மாடுகள்

விவசாயம் என்றால் டிராக்டர் என்று நினைக்கிறார்கள். 50 வருடத்திற்கு முன் விவசாயம் என்றால் மாடு (Jansi Balraj, 2019). டிராக்டர் 1 மணி நேரம் உழும், மாடு 1 வருடம் உரம் கொடுக்கும். டிராக்டர் டீசல் தின்னும், மாடு புல் தின்னும். டிராக்டர் கடன், மாடு வருமானம். உழவு - மாடு தான் முதல் டிராக்டர். 1 காங்கேயம் காளை 1 ஏக்கர் 1 நாளில் உழும். டிராக்டர் 1 மணி நேரம். டிராக்டர் வேகம், மாடு வளம். காங்கேயம் காளைக்குத் திமில் உண்டு, அது வெயில் தாங்கும், 45 டிகிரியிலும் உழும். ஜெர்சி காளைக்குத் திமில் இல்லை, வெயிலில் சாகும்.

## தீவனம்

மாட்டிற்கு கொடுக்கப்படும் தீவனங்களை இரண்டு வகையாக பிரிக்கலாம். 1. பராமரிப்புத் தீவனம். 2. உற்பத்தித் தீவனம். ஒரு மாட்டை பராமரித்து அந்த மாடு நன்றாக சாப்பிட வேண்டும் நன்றாக வளர வேண்டும் என்று கொடுக்கப்படும் தீவனம் பராமரிப்புத் தீவனம். பால் கறக்கவும், அதன் உள்ளே உள்ள கன்று வளர்வதற்காகவும் கொடுக்கப்படும் தீவனம் உற்பத்தித் தீவனம்.

### பசுந்தீவனம்

வெறும் சோளப் பயிர் மட்டும் கொடுப்பதன் மூலம் மாட்டிற்கு வயிறு நிறையுமே தவிர சத்து கிடைக்காது. மொச்சைப் பயறு, பச்சைப் பயறு ஆகியவை சோளத்துடன் கலந்து கொடுக்கும் போது அதற்கு தேவையான சக்திகள் கிடைக்கிறது. சோளத்தைத் தனியாக விதைக்காமல் மொச்சை பயிர், பச்சை பயிறு சேர்த்து விதைக்க வேண்டும் ஒரே தாவரம் எல்லா சத்தையும் உறிஞ்சி மாடுகளுக்குக் கொடுக்காது. அதனால் கலப்பு பயிர்களைக் கலந்து கொடுக்க வேண்டும். ஒரு நாளைக்கு 25 கிலோ பசுந்தீவனம் அந்த மாட்டிற்குக் கொடுக்க வேண்டும். இது மாட்டினை பொருத்து மாறும். சாணத்தின் மூலம் கிடைக்கும் உரத்தைப் பயன்படுத்தி மாட்டிற்கான தீவனத்தைத் தயார் செய்யலாம். யூரியாவிற்காக 700, 800 ரூபாய் செலவு செய்ய தேவைஇல்லை. பசுந்தீவனத்தை வெயில் நேரங்களில் கொடுக்க வேண்டும். மாலை நேரங்களில் உலர் தீவனத்தைக் கொடுக்க வேண்டும். வைக்கோல், கடலுக்குடி இவை யாவும் உலர்தீவனம். அடர் தீவனம் எரிசக்தி, புரதம், தாது உப்புக்கள், வைட்டமின்கள், தானியம், பிண்ணாக்கு, பயிறு வகைகள், குருணை, தவிடு இவை யாவும் அடர் தீவனமாக மாட்டிற்குக் கொடுக்கப்படுகின்றன.

## மாடுகளுக்கு ஏற்படும் நோய்கள்

### கோமாரி நோய்

கோமாரி நோய் தொற்று கிருமிகளால் ஏற்படும். மழைக்காலங்களில் இந்நோய் கால் குளம்புகளில் தோன்றி அதன் மூலம் வாய்ப்பகுதிக்கும் பரவி விடுகிறது. மூன்று வாழைப்பழத்தை நல்லெண்ணெயுடன் கலந்து 24 மணி நேரம் ஊற வைக்க வேண்டும். கோமாரி நோய்க்கு இது சரியாகும். இதை அள்ளி மாட்டின் நாக்கில் தடவினால் உமிழ்நீருடன் சேர்ந்து முழுங்கும். இதை ஒரு வாரம் தொடர்ந்து செய்ய வேண்டும் இவ்வாறு செய்தால் அந்த நோயானது சரியாகும் (Thirunelveli Nellayya Pillai, 2019).

### வயிறு உப்புசம்

மாட்டின் வயிறானது உப்பி காணப்படும். வயிற்றில் இருந்து இரைச்சல் சத்தம் வரும். அடிக்கடி வாயு வெளியேறும். கெட்டுப்போன சாதத்தை அதிகமாக உண்பதாலும் வழக்கம் இல்லாத தீவனத்தைக் கொடுப்பதாலும் தீவனத்தின் திடீர் மாற்றத்தாலும் வயிறு உப்புசம் ஏற்படுகிறது அதற்கு நல்லெண்ணெய் 100 மில்லி லிட்டர் எருக்கன் இலைக் கொத்து ஒன்று சேர்த்து சாப்பிட வைத்தால் சிறிது நேரத்தில் மாடு அசைப்போட ஆரம்பிக்கும். புலி 200 கிராம், உப்பு 200 கிராம் இவைகளை அரை லிட்டர் நீரில் கலந்து வடிகட்டி கொடுத்தாலும் சரியாகும்.

### மலச்சிக்கல்

மாடுகளின் சாணம் கல் போல் இறுக்கமாக இருக்கும் பார்ப்பதற்கு ஆட்டின்ப் புழுக்கை போன்றிருக்கும். எதுவும் உண்ணாமல் சோர்வாகவும் வயிறு வலியுடன் இருக்கும். செரிமானம் மற்றும் மரத்தை வளம் அதிகமாக உண்பதால் இவ்வாறு மலச்சிக்கல் உண்டாகிறது விளக்கெண்ணெய் 100 மில்லி லிட்டர் உள்ளே ஊற்ற வேண்டும் பழம் பாசித்தழை ரெண்டு கைப்பிடி அளவு அரைத்து 200 மில்லி லிட்டர் விளக்கெண்ணெய் கலந்து மாட்டிற்கு கொடுக்க வேண்டும்.

### மடிநோய்

கறவை மாடுகளுக்கு மடி வீங்கி சூடாக இருக்கும். அதிகமான காய்ச்சல் காணப்படும் மடியைத் தொட்டால் வலியில் தாங்காமல் உதைக்கும். மாட்டிடம் பால் கறந்த பின் அதனை சுத்தம் செய்யாமல் விடுவதன் மூலம் மடி நோய் வருகிறது. பால் கறந்த ஒரு மணி நேரத்திற்கு மடியின் ஓட்டை மூடாமல் இருக்கும். இதன் வழி நோய்த் தொற்று ஏற்படுகிறது. புளிச்சக்கீரை வெள்ளெருக்கம் பூ, சின்ன வெங்காயம் இவற்றை தண்ணீர் விடாமல் அரைத்து மடியின் மேல் பூச வேண்டும். தும்பை இலை, உசிலை இலை, கோவை இலை, வேப்பம்பட்டை ஒவ்வொன்றும் சரியான அளவு எடுத்து அரைத்து கடலை எண்ணெயில் கலந்து மடியில் தடவ வேண்டும்.

### கண் நோய்

மாட்டின் கண்களில் நீர் வடிந்து, சிவந்து இருக்கும். இது காற்றில் வரும் தூசியாலோ பூச்சி தாக்கினாலோ கண்நோய் ஏற்படும். முருங்கை சாறு, கீழாநெல்லி சாறு இரண்டையும் மூன்று நாட்களுக்குக் கண்ணில் விட வேண்டும். இவ்வாறு செய்தால் கண் நோய் குணமாகும்.

## கால் நடை சந்தை

கொங்கு நாட்டில் நடைபெறும் கால்நடை சந்தைகளானது மிகவும் புகழ் பெற்றவையாகும். கொங்கில் குறிப்பிட்ட சில ஊர்கள் இன்றளவும் தொன்றுதொட்டு நடைபெறும் தேர்த்திருவிழாவில் வருடத்திற்கு ஒருமுறை வெளியூர்களிலிருந்து மாடுகளைக் கொண்டு வந்து விற்பர். இதற்கு ஏதுவாக கால்நடை சந்தைகள் தொடங்கப்பட்டு நடைபெறுகின்றது.

### நடைபெறும் இடங்கள்

பழைய கோட்டை, ஈரோடு, பெருந்துறை, திருப்பூர், முத்தூர், சேலம், வெள்ளகோவில், குண்டடம். 1. கிடை சந்தை - உண்மையான சந்தை வாங்குபவர் கிடைக்காரர், விவசாயி. தரகர் இல்லை. மாட்டை பல் பார்த்து, கொம்பு பார்த்து, மடி பார்த்து, சாணம் பார்த்து வாங்குவார்கள். விலை ரூ.40,000 முதல் ரூ.2 லட்சம் வரை. ஒரு சந்தைக்கு 500 மாடு வரும். ஒரு நாள் புரளும் பணம் ரூ.2 கோடி. 2. அடிமாட்டு சந்தையின் இருண்ட பக்கம். 3. நவீன பண்ணை சந்தை.

### சந்தையின் 5 நபர்கள்

1. கிடைக்காரர் - உற்பத்தியாளர்: மாட்டை வளர்ப்பவர். அவருக்கு மாட்டின் வரலாறு தெரியும். "இந்த மாடு 2-ம் ஈத்து, 4 லிட்டர் கறக்கும், கன்று போட 10 நாள் உள்ளது" என்று சொல்வார். பொய் சொல்ல மாட்டார். ஏனென்றால் அடுத்த சந்தையில் மீண்டும் பார்க்க வேண்டும். நம்பிக்கை தான் மூலதனம். 2. தரகர் - இடைத்தரகர்: இவர் இல்லாமல் சந்தை இல்லை. வெள்ளை சட்டை, துண்டு, கையில் கயிறு. ஒரு மாடு விற்றால் ரூ.1000லஞ்சம். இவர் தான் விலை பேசுவார். "இந்த மாடு 2 பல் தான், நல்ல மாடு" என்று பொய் சொல்வது இவர் தான். கொம்பு சீவுதல், பல் தேய்த்தல் மோசடி இவர் மூலம் தான் நடைபெறும். 3. வியாபாரி - வாங்கி, விற்பவர்: குறைந்த விலைக்கு வாங்கி, அதிக விலைக்கு விற்பவர். ஒரு சந்தையில் வாங்கி அடுத்த சந்தையில் விற்பார். லாரி வைத்திருப்பார். 4. விவசாயி - நுகர்வோர்: விளைச்சலுக்காகவும், பாலுக்காகவும் மாடு வாங்க வருபவர். பல் பார்ப்பார்,

கொம்பு வளையம் பார்ப்பார், மடி தொட்டு பார்ப்பார், சாணம் பார்ப்பார். 10 நிமிடத்தில் மாட்டின் வயதை சொல்லி விடுவார். 5. கோட்டு தச்சன் / பல் தேய்ப்பவர்: சந்தையின் ஓரத்தில் இருப்பார். கொம்பு சீவ ரூ.200, பல் தேய்க்க ரூ.500, M-Seal ஒட்ட ரூ.300. சந்தை மோசடியின் தொழில்நுட்பம் இவர் கையில். பல் பரிசோதனை: வாயை திறந்து பல் பார்ப்பது. 2 பல் = 2.5 வயது, 4 பல் = 3.5 வயது, 6 பல் = 5 வயது, தேய்ந்த பல் = 8 வயதுக்கு மேல். கொம்பு வளையம்: கொம்பில் ஒரு வளையம் ஒரு வருடம் ஆகும். வளையத்தைத் தேய்த்து மோசடி செய்வார்கள். அடியில் தழும்பு பார்த்தால் தெரியும். மடி பரிசோதனை: மடியைத் தொட்டு பார்ப்பது. கல் போல இருந்தால் மடி நோய். பஞ்சு போல இருந்தால் நல்ல மாடு. பால் கறந்து பார்ப்பது. சாண பரிசோதனை: சாணம் கெட்டியாக இருந்தால் ஆரோக்கியம், தண்ணியாக இருந்தால் நோய். நடை பரிசோதனை: மாட்டை 10 அடி நடக்க விடுவது. கால் இழுத்தால் கால் நோய். கண் பரிசோதனை: கண் சிவந்து இருந்தால் காய்ச்சல், கண் வெளுத்து இருந்தால் சோகை.

### சந்தையின் மோசடிகள் - இருண்ட பக்கம்

வயது மோசடி: 6 பல் மாட்டை 2 பல் என்று பல் தேய்த்து விற்பது. லாபம் ரூ.30,000. பால் மோசடி: கறவைக்கு முன் 3 நாள் பால் கறக்காமல் மடியை பெரிதாக்கி காட்டுவது. வீட்டுக்குப் போனால் பால் குறையும். சினை மோசடி: சினை இல்லாத மாட்டை சினை என்று சொல்லி விற்பது. 3 மாதம் கழித்து தான் தெரியும். கொம்பு மோசடி: முட்டு கொம்பை பிறை கொம்பு போல திருத்துவது.

### பால்

பால் என்பது பண்பாடு. ஒரு குழந்தை பிறந்தால் தாய்ப்பால், ஒரு மாடு கன்று போட்டால் சீம்பால். இரண்டும் ஒன்று தான். ஆனால் வெள்ளைப் புரட்சி பாலை வெறும் லிட்டர் கணக்காக மாற்றி விட்டது. பாலை லிட்டராக பார்க்காமல், பண்பாட்டிற்காகவும், செய்யக்கூடியப் பொருளாகவும் மோசடி பார்க்கின்றனர்.

1.சீம்பால் - முதல்பால்: கன்று போட்ட 3 நாள் வரை வரும் பால். மஞ்சள் நிறமாகவும், கெட்டியாகவும் இருக்கும். யாரும் இதை விற்க மாட்டார்கள். குழந்தை, பூசாரிக்குக் கொடுப்பார்கள். சீம்பால் குடித்தால் 1 வருடம் நோய் வராது என்று நம்பிக்கை. சந்தையில் விலை இல்லை, மரியாதை உண்டு. ஒரு லிட்டர் சீம்பால் ரூ.500 கொடுத்தாலும் கிடைக்காது. ஏனென்றால் கன்றுக்குத் தான். 2. கறந்த பால் - தினசரி பால்: தினமும் கறக்கும் பால். காங்கேயம் 3 லிட்டர், ஜெர்சி 10 லிட்டர். ஆனால் காங்கேயம் பால் கெட்டி, ஜெர்சி தண்ணி. காங்கேயம் 1 லிட்டரில் 200ml நெய் வரும், ஜெர்சியில் 80ml தான். 3. வற்றிய பால் - கடைசி பால்: சினை மாடு 7 மாதம் ஆனால் பால் வற்றும். தண்ணியாக வரும். இதை விற்க மாட்டார்கள். வீட்டில் தயிர் ஆக்குவார்கள். 4. ஊத்து பால் - கலப்பட பால்.

### பால் மோசடி

1. சந்தையில் பால் மோசடி: மாடு விற்கும் போது 3 நாள் கறக்காமல் விடுவது. Oxytocin Injection போட்டு பால் இறக்குவது.1 ஊசி ரூ.5. பால் 2 லிட்டர் கூடுதலாக வரும். ஆனால் மாட்டுக்கு மடி நோய் வரும். கண்டுபிடிக்க மடியில் ஊசி தழும்பு பார்க்க வேண்டும். 2. பாக்கெட் பால் மோசடி: 1 லிட்டர் பாலில் 700ml பால் + 300ml தண்ணி + 10gm பால் பவுடர் + 2gm யூரியா. ஆய்வகத்தில் கண்டுபிடிக்க முடியாது. ஆனால் குழந்தைக்கு வயிற்றுப் போக்கு உண்டாகும். 3. A1 - A2 மோசடி: நாட்டு மாட்டு பால் A2, ஜெர்சி பால் A1. இந்த A1 vs A2 தான் உலக பிரச்சனை. A2 பால் என்று சொல்லி Jersey பால் விற்பது. உண்மையான A2 காங்கேயம், புலிகுளம் மட்டும் தான். பால் என்பது லிட்டர் அல்ல, அது உயிர். வெள்ளைப் புரட்சி பாலை லிட்டராக்கியது, பாக்கெட்டாக்கியது, கலப்படமாக்கியது. நாட்டுப்புற பொருளாதாரம் பாலை சீம்பால், கறந்த பால், வற்றிய பால் என்று பிரித்து, கன்றுக்கு விட்டு கறந்தது. ஒன்றில் லாபம் உண்டு, உயிர் இல்லை. இன்னொன்றில் உயிர் உண்டு, லாபம் குறைவு. A1 பால் என்ன செய்யும்? ஜெர்சி பாலில் A1 Beta-Casein உள்ளது. இது ஜீரணமாகும் போது BCM-7 (Beta-Casomorphin-7) என்ற போதை பொருள் வரும். இது குழந்தைக்கு வகை-1 நீரிழிவு நோய், ஆட்டிசம், இதய நோய், வயிறு வலி, சளி போன்றவை வரும் A2 பால் காங்கேயம், கிர், சாகிவால் A2 தான். மனித தாய்ப்பாலும் A2 தான். BCM-7 வராது. ஜீரணம் எளிது.

### காங்கேயம் நாட்டு மாடு

தீவனம் ரூ.30, மருந்து ரூ.5, தண்ணீர் ரூ.5. மொத்தம் ரூ.40. பால் 3 லிட்டர். ஒரு லிட்டர் உற்பத்தி செலவு ரூ.13. இது மேய்ச்சலை நம்பி வாழும் மாடு. காட்டில் வேப்ப இலை, அருகம்புல், கொழுக்கட்டைப் புல் தின்னும். அதனால் தீவன செலவு குறைவு. நோய் எதிர்ப்பு சக்தி அதிகம். மருந்து செலவு இல்லை.

### ஜெர்சி சீமை மாடு

தீவனம் ரூ.250, மருந்து ரூ.50, மின்சாரம் ரூ.20. மொத்தம் ரூ.320. பால் 10 லிட்டர். ஒரு லிட்டர் செலவு ரூ.32. இது பண்ணையில் கட்டி வளர்க்கும் மாடு. புண்ணாக்கு, கலப்பு தீவனம் இல்லாமல் பால் கொடுக்காது. மாதம் ஒரு முறை Doctor, Injection. அதனால் செலவு அதிகம்.

### சாணம் - பாலை விட பெரிய பொருளாதாரம்

அரசு பாலை மட்டும் கணக்கிடுகிறது. விவசாயி சாணத்தையும் கணக்கிடுகிறான். ஒரு காங்கேயம் பசுவின் ஒரு வருட சாண வருமானம் ரூ.43,500. எரு ரூ.18,000, வரட்டி ரூ.7,500, விபூதி ரூ.9,000, ஜீவாமிர்தம் மூலம் ரசாயன உரம் மிச்சம் ரூ.9,000. பால் வருமானம் ரூ.34,200. சாணம் பாலை விட அதிகம். ஜெர்சி சாணம் ரூ.6,000 கூட தேறாது. அதனால் தான் விவசாயி காங்கேயத்தை விடவில்லை.

பால் பொருளாதாரத்தில் ஏமாறுவது விவசாயியும் நுகர்வோரும், ஜெயிப்பது இடைத்தரகரும் கம்பெனியும். நேரடி விற்பனை, சாணத்திற்கு ஆதார விலை, A2 பாலுக்கு தனி விலை ஆகிய மூன்று தான் தீர்வு. பால் என்பது லிட்டர் அல்ல, அது உயிர் என்று புரிந்தால் தான் பால் பொருளாதாரம் நிலைக்கும்.

சந்தை என்பது மாடு வாங்கும் இடம் அல்ல, அது சமூகம் கூடும் இடம். கோவில் திருவிழா போல, சந்தை திருவிழா. வருடம் ஒரு முறை கோவில், வாரம் ஒரு முறை சந்தை. கோவிலில் சாமி கும்பிடுவார்கள், சந்தையில் மாடு கும்பிடுவார்கள். இந்த கட்டுரை சந்தையை சாதி, பாலினம், உறவு, மோசடி என்ற கண்ணாடியில் பார்க்கிறது.

### மாட்டின் தீமை தரும் சுழிகள்

முக்கண் சுழி / அக்கினி சுழி, குடைமேல் குடை | இடி மேல் இடி, விலங்கு சுழி, பாடை சுழி, பெண்டிழந்தான் சுழி, நாகப்பட சுழி, தட்டுச் சுழி, துடைப்பை சுழி, புட்டாணிச் சுழி, படைக்கட்டு சுழி, எச்சுப்புள்ளி, வால் முடங்கிச் சுழி, இறங்கு நாக சுழி, கருநாக சுழி, மென்னிப்பிடி சுழி, இறங்கு பூரான் சுழி இதனைப் பார்த்து வாங்க வேண்டும் இதனை ஏமாற்றி நம்மிடம் விற்கவே நினைப்பார்கள்.

சுழி போலவே பல் பார்த்தும் வாங்குவர் மாட்டின் வயதை பல் முளைத்தல் வைத்து நிர்ணையிப்பர். முன் வெட்டுப்பற்கள், முன் கடவாய் பற்கள் மற்றும் தாடை வாய்பற்கள் என்று மூன்று வகை உண்டு. கோரைப்பற்கள் கிடையாது. மாடுகளுக்கு 32 பற்கள் நிரந்தர பற்கள் இருந்தாலும் அவற்றின் கீழ் தாடையில் உள்ள நாலு ஜோடி முன்வெட்டு பற்களை வைத்து தான் அதன் வயது கணக்கிடப்படும். கன்று பிறந்தவுடன் இரண்டு பற்களும் பிறகு இரண்டு வார வயதில் ஒரு பல்லும் மூன்றாம் வார வயதில் மேலும் இரண்டு பல்லும் நாலாவது வாரம் ரெண்டு பல் என எட்டுப்பற்கள் கீழ் தாடையில் இருக்கும் இது தற்காலிக பற்கள். மாட்டிற்கு பத்து வயதாகும் போது பற்கள் தேய்ந்த நிலையில் காணப்படும். 12 வயதானவற்றை வயதில் முதிர்ச்சி மாடு என்பர் ஒவ்வொரு வகை காளையும் அதன் உயரம் நிறம் வயது வகை திமில் போன்றவற்றை வைத்து அதற்கேற்றார் போல் விலை போகும்.

கண்ணபுரம் தேர் திருவிழாவில் நாட்டு மாடுகள் மற்றும் நாட்டு பண்ணைகள் வைத்திருக்கும் ஒரு சில நபர்கள் அறிமுகமானார்கள். அப்படிதான் களப்பணிக்காக CK cattle farm சென்றேன். சிதம்பரசாமி அவர்கள் நாட்டு மாடுகள் பண்ணை வைத்திருக்கிறார். செவலை, காரி, மயிலை, கறவை மாடுகள் என அனைத்தும் கலந்த பண்ணையாக இருந்தது. இவரிடம் பெருங்கூட்டு மாடுகள் இருந்தன. பார்ப்பதற்கு நல்ல உடல்வாகுடனும் வீரியத்துடனும் இருக்கும் மாடுகளை பெருங்கூட்டு மாடுகள் என்பர். இவரிடம் நாட்டு மாடுகள் பற்றி கேட்டபோது அவர் நிறைய தகவல்களை பகிர்ந்தார். மாடுகளுக்கு எந்த மாதிரி உணவு கொடுக்கப்படுகிறது என்று கேட்கையில் அவர், "பெரிதாக ஒன்றும் இல்லை காய்ந்த பொருட்கள் கொள்ளு தவிடு புண்ணாக்கு என்று குறைந்த விலை உணவுகளை போதுமானது. நாட்டு மாடுகளுக்கு குறைந்த உணவு அதிக வேலை" என்று கூறினார். பசுந்தீவனம், உலர் தீவனம், அடர் தீவனம் என்று உணவானது மாட்டை பொருத்து மாறும். பசுந்தீவனம் உடல் குளிர்ச்சிக்கும் செருமானத்திற்கும் அவசியமாகிறது உலர் தீவனம் வறட்சி காலங்களில் கொடுக்கப்படுகிறது தண்ணீர் மட்டுமே நாட்டு மாடுகளுக்கு போதுமானதாக இருக்கும் அதன் உடலானது அதிக சுமை இழுக்கும் வகையில் அமைந்துள்ளது நாள் முழுவதும் வெளியில் மேய்ந்தாலும் அதற்கு களைப்பு என்பது இருக்காது. அதனால் தான் நாட்டு மாடுகளை சுமை இழுப்பதற்கும் மேய்ச்சல் நிலங்களுக்காகவும் வளர்த்தனர். மாடுகள் வாங்குவது மற்றும் விற்பது பற்றியும் கூறினார். வழி வழியாக கால்நடைகளை வளர்த்தி வருவதாகவும் கூறினார். 75 வருட அனுபவம் உள்ளதாகவும் அவர் பயணத்தில் நிறைய அரசியல்வாதிகளுக்கு மாடுகளை விற்றதாகவும் கூறினார். இன்றைய இளைஞர்கள் நாட்டு மாடுகள் வாங்குவது ஆர்வமாக உள்ளனரா என்று கேட்கையில் அவர் இளைஞர்கள் ஆர்வமுடன் தான் இருக்கிறார்கள் ஆனால் அதைத் தாண்டி தன் சாதி பெருமை பேசும் எண்ணத்துடனும் தான் உயர் சாதி

என்று காட்டவும் தான் அதிகமாக வாழ்கின்றனர். இதன் மூலம் தன் சாதிப்பற்றை காட்டுகின்றார்கள் இன்றைய காலகட்டத்தில் யார் வேண்டுமானாலும் நாட்டு மாடுகளையும் கால்நடைகளையும் வாங்கலாம் என்ற நிலை உள்ளது. ஆனால் அப்போது அவ்வாறு இல்லை. வேளாண்மை செய்பவர்களும் உயர் சாதிக்காரர்களும் மட்டுமே நாட்டு மாடுகளை வைத்திருந்தார்கள்.

அவர்களிடம் அதிக அளவிலான நிலமும் வசதியும் இருந்ததால் வேளாளர் சமூகத்தை சார்ந்த மக்களே அதிக அளவில் கால்நடைகளை வைத்திருந்தனர். அவர்களால் மட்டுமே வாங்க முடியும் விற்க முடியும் என்ற நிலை இருந்தது. மாடுகளை விற்கும் போது இவர்களின் மாடுகள் அதிகளவில் விலை போகும். கண்ணை மூடிக்கொண்டு வாங்குவர் இதற்கு காரணம் கவுண்டர் வீட்டு மாடு என்றால் நன்றாகத் தான் கவனித்திருப்பார்கள் என்ற நம்பிக்கை அனைவரிடமும் உண்டு. இதனாலேயே கவுண்டர் வீட்டு மாடுகளை கண்ணை மூடிக்கொண்டு வாங்கலாம் என்று சொல்வார்கள்" என்றார். இதன் மூலம் கால்நடைகள் ஒரு சமூகத்தின் பொருளாதாரத்தை குறிக்கிறது. இன்னார்தான் இந்த தொழில் செய்ய வேண்டும் என்ற ஒன்று இன்றளவும் இருக்கிறது. கால்நடைகளை வளர்ப்பவர்கள் அதற்கான பராமரிப்பு வேலைகளை செய்வதில்லை. உயர் ஜாதி வீட்டில் வளரும் கால்நடையானது கீழ் சாதிக்காரனாக உள்ள ஒருவரால் பராமரிக்கப்படுகிறது தொழுவத்தை சுத்தம் செய்தல், சாணம், கோமியம் போன்றவற்றை சுத்தம் செய்தல், மாடுகளை குளிப்பாட்டுதல், மேய்ச்சலுக்கு அனுப்புதல், தீவனம் அளித்தல் போன்ற வேலைகள் அவர்களின் வீட்டில் வேலைக்காரன் என்று சொல்லக்கூடிய கீழ் சாதிக்காரனால் செய்யப்படுகிறது. இது எல்லாமும் செய்வது வேலைக்காரனாக இருந்தாலும் அவரை வீட்டுக்குள்ளும் பட்டு நோம்பி கும்பிடும் போதும் பூஜையில் பங்கேற்கச் செய்வதில்லை. வெளியிலே நிற்க வைக்கும் நிலை உள்ளது. தகவலாளியிடம் மாடு எவ்வாறு பார்த்து வாங்குவது மற்றும் விற்பது என்று கேட்டபோது "முதலில் நாட்டு மாடுகளை பார்த்தால் நல்ல உடல்வாகு உடன் வலுவுடன் உயரமாக இருக்கும். பார்த்தால் பயம் ஏற்படுத்தும் வகையில் இருக்கும். திமில் பெரியதாக கழுத்து தொங்கியபடி வியக்க வைக்கும் உருவில் இருக்கும். நாட்டு மாடுகளை வாங்கும் போதும் முதலில் வயதை கேட்டபின் முதல் ஈத்தா இல்லை இரண்டாம் ஈத்தா என்று கேட்டு வாங்குவர். மாடுகளுக்கு பல் உள்ளதா? எத்தனை பல் என்ற கேள்விகளை விற்பனையாளர்களிடம் கேட்டு வாங்குவர். மாடு வளர்ந்த விதம் எப்படி...கொரங்காடு பகுதியில் வளர்ந்ததா வயல்வெளிகளில் வளர்ந்ததா என்று கேட்பார். இதில் சிலர் ஏமாற்றக்கூடும். ஆதலால் நன்கு விசாரித்து வாங்க வேண்டும். கொம்பு சீவி உள்ளதா என்பதை பார்த்து வாங்க வேண்டும். வயதான மாட்டிற்கு கொம்பு சீவி ஏமாற்றி விற்பார்கள்.

## முடிவுரை

மாடு என்பது மிருகம் அல்ல, அது பண்பாடு, அறிவியல், பொருளாதாரம். பழமொழி, சடங்கு, கதை போன்றவற்றில் உள்ளது. இந்த கட்டுரையின் மூலம் நாட்டு மாடுகளின் பொருளாதாரம் பற்றி ஆய்வு செய்யப்பட்டது. கள ஆய்வில் இருந்து தெரியவந்த முக்கிய விஷயம் என்னவென்றால், ஜெர்சி மாடு நஷ்டம், மேலும் சந்தை 75% சரிந்துள்ளது என்பதும், நாட்டுமாட்டுப் பால் தான் ஆரோக்கியம் என்பதும் உறுதி செய்யப்பட்டது. நாட்டு மாடு நஷ்டம் என்று இருந்தாலும், களாய்வில் அது லாபம் என்பது தெளிவாகிறது. இந்த இடைவெளி தான் பிரச்சனை. இறுதியாக, நாட்டு மாடு என்பது மாடு மட்டும் அல்ல, அது வாழ்வியல். அதை காப்பது மண்ணை காப்பது ஆகும்.

## References

Jansi Balraj, T. (2019) Maadum Vandiyum Porulsaar Panpattu Aaivu, New century Book house, Chennai, India

Nagarajan, D. (2017) Details of survived native cow breeds in india, Vikatan. Availbale at: https://www.vikatan.com/literature/arts/78500-details-of-survived-native-cow-breeds-in-india

Sarang, S.K., Sreekumar, D., & Sejian, V. (2024). Indigenous cattle biodiversity in India: Adaptation and conservation. Reproduction and Breeding, 4(4), 254-266. https://doi.org/10.1016/j.repbre.2024.09.001

Thirunelveli Nellayya Pillai, (2019) Cow Diseases and Treatment (Tamil), B. Rathina Nayakar & Sons, Chennai, India

## Conflict of interest

The Author's have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

## About the License

© The Author(s) 2026. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License

**Cite this Article**

M. Deepika, K. Dhanalakshmi, Economic Significance and Sustainability of Indigenous Cattle Breeds in Tamil Nadu, Indian Journal of Tamil, 7(2), (2026) 40-49. https://doi.org/10.54392/ijot2626